**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 20/மாநகராட்சி/2022**

**நாள் : 21.3.2022**

| | | |
|---|---|---|
| திரு. K. சுந்தரமூர்த்தி,<br>தூத்துக்குடி. | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தூத்துக்குடி மாநகராட்சி. | – | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி, III Mile, 12வது தெரு, P&T காலனி, 2F/582, என்ற எண்ணிடப்பட்ட முகவரியில் வசிக்கும் திரு. K. சுந்தரமூர்த்தி, அவர்களின் 25.01.2022 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2022-ல் பெறப்பட்டு 20/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, III Mile, 12வது தெரு, P&T காலனி, 2F/582, என்ற எண்ணிடப்பட்ட முகவரியில் வசிக்கும் திரு. K. சுந்தரமூர்த்தி, அவர்களின் 25.01.2022 நாளிட்ட புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :

- “ நான் க.சுந்தரமூர்த்தி வயது 70, FCI Retired 2F/582, P&T காலனி 12வது தெரு, தூத்துக்குடி – 628 008 என்ற விலாசத்தில் 30 வருடங்களாக (1991-92) முதல் பஞ்சாயத்து பகுதியாகவுள்ள காலத்திலிருந்தே வசித்து வருகிறேன். தூத்துக்குடி மாவட்டத்தை 2008ல் மாநகராட்சியாக அறிவித்து ஏழிலிருந்து எட்டு வருடங்களுக்கு பிறகு 2017-ல் வீடு கட்டி குடியேறிய

(பக்கத்து வீட்டுக்காரர்) சேவியர் ரூபினாவுக்கு எங்கள் வீட்டு கதவு எண்ணை (2F/582) மாநகராட்சி கொடுத்துள்ளது. இது சம்பந்தமாக தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம், என்னை 5 வருடங்களாக அழைக்கழிக்கிறார்கள்.

- அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வரும் இருவேறு வீட்டு உரிமையாளர்களின் வீடுகளுக்கு ஒரே கதவு எண் இருப்பதாலும், எங்களின் 30 வருடகால ஆவணங்களில் குழப்பங்கள் ஏற்படாமல் இருக்கவும் தூத்துக்குடி மாநகராட்சி முன்னாள் ஆணையரை சந்தித்து மனு அளித்தேன்.
- முன்னாள் ஆணையர் ஐயா அவர்கள் மூலமாக சம்பந்தப்பட்ட துறையினர்கள் 12வது தெருவில் உள்ள எனது வீட்டையும், ஆவணங்களையும் ஆய்வு செய்து 2F/581 எண் சேவியர் ரூபினாவுக்கு கணினியில் ஏற்றப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அறிவிப்பு தபால் மூலம் எனக்கு வந்தது.
- ஆனால் 2F/581 என்ற கதவு எண் சேவியர் ரூபினாவுக்கு கணினியில் ஏற்றப்படாமல் எனது வீட்டுக் கதவு எண்.2F/582-ஐ பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆணையர் ஆணையை பிறப்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகியும், மாநகராட்சி ஊழியர் Spl. Revenue Inspector ஜான்சன் அவர்களும் துணை ஆணையர் சந்திரமோகன் அவர்களும் ஒருதலை பட்சமாக செயல்பட்டு கொண்டு இருக்கிறார்கள்.
- முன்னாள் ஆணையர் ஐயா ஜெயசீலன் அவர்கள் (அ1/176/2020/மே.ம தேதி:07.09.2020) ஆணை பிறப்பித்து பத்து மாதங்களுக்கு பிறகு, புதிய ஆணையர் வரும் வரை காத்திருந்து (அ1/001019/2020/மே.ம தேதி 24.06.2021) அறிவிப்பு தபால் எனக்கு கொடுத்திருக்கிறார்கள். அதில் எனது வீடு 11வது தெருவில் இருப்பதாக தவறான பொய் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.
- 5 வருடத்திற்கு மேல் காலம் கடத்தியவர்கள் இன்னும் காலம் கடத்துவதற்கு தந்திரமாக இவ்வாறு செயல்படுகிறார்கள். எனது 30 வருட காலத்தின் எல்லா ஆவணங்களிலும் கதவு எண்.12வது தெரு விலாசத்தில் தான் உள்ளது.
- தூத்துக்குடி மேற்கு மண்டலம் மாநகராட்சி 2017-லிருந்து எனது தண்ணீர் தீர்வை வரி விதிப்பு எண்.3400089 அட்டையை வழங்கவில்லை. ஒவ்வொருமுறை தண்ணீர் தீர்வை அட்டை கேட்டு தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் செல்லும்பொழுதும், பொறியாளர் கையொப்பத்திற்காக சென்றுள்ளதாகவும், கையொப்பமிட்டு வந்த பிறகு தண்ணீர் தீர்வையை கட்டுமாறும் மாநகராட்சி ஊழியர்கள் கூறுகின்றனர்.
- மனநிம்மதியுடன், சுமூகமாக வாழவேண்டிய வயதில் (70 வயது) என் வயது முதிர்ச்சியையும் பொருட்படுத்தாமல், CORONA போன்ற பெருந்தொற்றுக் காலத்திலும் என்னை வருடக் கணக்காக அலைக்கழிக்கிறார்கள்.

- ஆகவே, தாங்கள் எனக்கு நல்ல தீர்வு தரும்படியும் எனது வீட்டு எண்.2F/582-ஐ சேவியர் ரூபினா பயன்படுத்துவதை தவிர்க்கும்படியும் அவருக்கு உண்டான பிளாட் எண்.15-ன் படி கதவு எண்.2F/581-ஐ பயன்படுத்தவும் மாநகராட்சி கணினியில் பதிவு செய்து ஆவண செய்யும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.
- ஐயா தன் கடமையை செய்ய தவறிய அரசு அதிகாரி, அரசு ஆணையை பின்பற்றாமல் இருந்த தூத்துக்குடி மேற்கு மண்டல மாநகராட்சி அதிகாரிகள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

2) மனுதாரரின் முறையீட்டு மனுவின் மீதான அறிக்கையை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு 14.2.2022 நாளிட்ட கடிதம் மூலமாக தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் பிரதிநிதி, உதவி ஆணையர் மேற்கு மண்டலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆகியோர் 22.2.2022 நாளிட்ட அழைப்பாணையின் மூலம் 1.3.2022 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு கோரப்பட்டனர்.

4) மனுதாரர் 1.3.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“தூத்துக்குடி மாவட்டம், P&T காலனி 12வது தெரு எண் 2F/582 என்கின்ற விலாசத்தில் கடந்த 1991 முதல் 30 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது பக்கத்து வீட்டுக்காரர் சேவியர் ரூபினா என்பவர் கடந்த 2013–2014ல் வீடு கட்டி குடியேறியுள்ளார். நான் வசிக்கும் மேற்கண்ட முகவரியின் 2F/582–கதவிலக்க எண்ணையே மேற்கண்ட சேவியர் ரூபினாவின் வீட்டிற்கும் மாநகராட்சி அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து வீடுகளில் வசித்து வரும் இருவேறு வீட்டு உரிமையாளர்களின் வீடுகளுக்கு ஒரே கதவு எண் இருப்பதால், பல குழப்பங்கள் நிலவுவதால், இது குறித்து புகார் மனுக்கள் மாநகராட்சியில் அளித்தும், என்னை 5 வருடங்களாக அலைகழித்து வருகின்றனர். மேலும் எனக்கு தண்ணீர் தீர்வை வரி அட்டையையும் மாநகராட்சியால் வழங்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட முகவரியில் 30 வருடங்களுக்கு முன்பு குடியேறிய, ஏற்கனவே எனது வீட்டிற்கு வழங்கப்பட்ட கதவிலக்கம் 2F/582–ஐ எனது பக்கத்து வீட்டுக்காரரான சேவியர் ரூபினா என்பவர் அவரது வீட்டிற்கான கதவிலக்கமாக பயன்படுத்துவதை தடுக்கும்படியும், அவருக்கு ஏற்கனவே மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட 2F/581 என்கின்ற கதவிலக்க எண்ணை மாநகராட்சியால் ஒதுக்கிட தேவையான நடவடிக்கை எடுக்கும்படியும் இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பான புகைப்பட நகலினையும் இம்முறை மன்றத்தில் சமர்பிக்கிறேன்.’’ என்று தெரிவித்துள்ளார்.

5) தூத்துக்குடி மாநகராட்சியில் உதவி ஆணையராக பணியாற்றும் டி. சந்திரமோகன் 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு P&T காலனியில் வசிக்கும் மனுதாரர் கே. சுந்தரமூர்த்தி P&T காலனி 11வது தெருவில் வசித்து வருகிறார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள சேவியர்ரூபினா என்பவர் P&T காலனி 12வது தெருவில் வசித்து வருகிறார். இரு வேறு தெருக்களில் வசிக்கும் மனுதாரர் திரு சுந்தரமூர்த்தி மற்றும் சேவியர்ரூபினா ஆகியோருக்கு வழங்கப்பட்ட கதவிலக்க எண்கள் வேறு வேறு என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெவ்வேறு தெருக்களில் வசிக்கும் மேற்கண்ட இருவருக்கும் 2F/582– என்கின்ற எண் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் அவர்களின் வாக்குமூலம், இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் மனுதாரர் மேற்கண்ட முகவரியில் 30 வருடங்களுக்கு முன்பு குடியேறியுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட கதவிலக்கம் 2F/582. மனுதாரர் 25.8.2020 நாளிட்ட மனுவின் மீது தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் 7.9.2020 நாளிட்ட அறிவிப்பில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கதவு எண்.2F/582 சுந்தரமூர்த்தி என்பவருக்கு 2001-ல் மீளவிட்டான் ஊராட்சியின் மூலம் வரிவிதிப்பு எண்.138/034/00622 வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்களை இணைத்துள்ளார். சேவியர்ரூபினா என்பவருக்கு கதவு எண்.2F/582 P&T காலனி என குறிப்பிட்டு சொத்துவரி வரிவிதிப்பு எண்.138/034/04308 2013-ல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது. திரு. சுந்தரமூர்த்தி என்பவருக்கு 2001-ல் கதவு எண்.2F/582 வழங்கப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வரிவிதிப்பிற்கு அருகாமையில் உள்ள சேவியர்ரூபினா என்பவருக்கு சுமார் 13 ஆண்டுகளுக்கு பின்னர் கதவு எண்.2F/582 என வழங்கப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. கதவு எண்.2F/582 அடுத்தடுத்த இரு வரிவிதிப்புகளுக்கும் ஒரே கதவு எண்ணாக இருக்கிற காரணத்தால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை தவிர்க்கும் விதமாக இரண்டாவதாக வரிவிதிப்பு செய்யப்பட்டவருக்கு கதவு எண் திருத்தம் செய்யப்பட வேண்டும். எனவே, சேவியர்ரூபினா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துவரி விதிப்பு எண்.138/034/04308-ல் உள்ள கதவு எண்.2F/582 என்பதை 2F/581 என்று திருத்தம் செய்து கணினியில் பதிவு செய்யப்படும்." என தெரிவித்துள்ளதை அறிய முடிகிறது.

மேலும் 07.09.2020 அறிவிப்பை மனுதாரர் பத்து மாதங்களுக்கு பிறகே அறிவிப்பு தபால் மூலம் பெறப்பட்டது எனவும், மனுதாரரின் வீடு 11வது தெருவில் இருப்பதாக தவறான பொய் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 30 வருட காலத்தின் எல்லா ஆவணங்களிலும் தெரு எண்.12வது தெரு விலாசத்தில் தான் உள்ளது என கூறியுள்ளார்.

7.9.2020 நாளிட்ட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அறிவிப்பின்படி சேவியர்ரூபினா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துவரி விதிப்பு எண்.138/034/04308-ல் உள்ள கதவு எண்.2F/582 என்பதை 2F/581 என்று திருத்தம் செய்து கணினியில் பதிவு செய்ய நடவடிக்கை

எடுக்க ஆணை பிறப்பித்து பத்து மாதம் கழிந்தே மனுதாரருக்கு அறிவிப்பு தபால் வழங்கியும், ஆணையர் ஆணை பிறப்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை கணினியில் பதிவேற்றம் செய்யாமலும் மேலும் மனுதாரரை வருட கணக்கில் அலைக்கழிக்க வைத்துள்ள செயலானது அதிகாரிகளின் அலட்சிய போக்கையே காட்டுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

ஆணையர் மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கிய பின்பும், உரிய காலத்தில் மனுதாரருக்கு அறிவிப்பு தபால் வழங்காமலும், இதுவரை கணினியில் திருத்தம் செய்ய பதிவு நடவடிக்கை மேற்கொள்ளாத அனைத்து அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் ஒரு வார காலத்திற்குள் 07.09.2020 நாளிட்ட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அறிவிப்பின்படி கணினியில் உரிய திருத்தம் மேற்கொள்ளவும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும் மனுதாரர் தண்ணீர் தீர்வை வரி செலுத்த தயாராக இருந்த போதிலும் தண்ணீர் தீர்வை வரி அட்டை வழங்காதது கண்டிக்கத் தக்கது. எனவே தண்ணீர் தீர்வை வரி அட்டையையும் மனுதாரர் திரு. K. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு துரிதமாக வழங்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The handling of the issue at the hands of the Thoothukudi Corporation authorities for nearly 3 years is absolutely condemnable and viewed with serious displeasure by this forum. This creates a valid suspicion in the mind whether the Thoothukudi Corporation is intent on bringing bad repute to the fair and just name of the Government that is doing its best to the common man by its many welfare measures. It is shocking that the decision of the former Commissioner who is an IAS Officer and passed clear orders to retain the earlier door No. of the petitioner in his communication dated 07.09.2020 has been put on the back burner by the successor Commissioners for reasons best known to them only. The present Commissioner has not sent any report on the complaint that adds to the suspicion of wanton treatment of the petitioner by sheer insensitive, inhuman and indifferent manner that deserves outright denunciation in strong terms. The oral deposition of the official who attended the enquiry on 1st March 2022 in Tirunelveli is not acceptable. At best it is seen as a defence of the other house owner Tmt.Xavier Rubina who has entered the door No. in documents such as Passport, Ration card etc., It is seen as gross favoritism, biased approach and partisan dealing in a Public official capacity. But he cleverly failed to bring this in his written deposition. Hence the following directions are issued to comply with forthwith.

1) Door Nos assigned by the previous Commissioner Thiru.V.P.Jeyaseelan, I.A.S., to be adopted without any change by the present Commissioner.
2) Disciplinary action against all the officials involved in this delay, omission and violation. This includes the mental agony, avoidable hardships and shabby treatment of a senior citizen, the petitioner in the instant case by the Thoothukudi Corporation's conduct.
3) Explanation of the Commissioner for non-response to this petition and the reasons thereof.

The Director of Municipal Administration is appraised of the scenario in the subject and is instructed to issue suitable guidelines to the Thoothukudi Corporation, in matters such as this. The Director of Municipal Administration is also instructed to oversee the disciplinary action initiated to the logical end with appropriate punishments awarded to the delinquents involved within a period of 4 months.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K. சுந்தரமூர்த்தி,
2F/582, P&T காலனி,
12வது தெரு, III Mile,
தூத்துக்குடி – 628 008.

2. ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி.
தூத்துக்குடி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்,
ஒருகிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

21/3/22

செயலாளர்